வாசிக்க: சங்கீதம் 23

***"அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப் 17:28)***

வேதத்தில் ஆங்காங்கே காணப்படும் யேகோவாவின் காரணப் பெயர்களின் ஆசீர்வாதங்கள் யாவும் 23ஆம் சங்கீதத்தில் வருகின்றன—





1

**யேகோவா-ரோகி / Jehovah-Rohi**

*மேய்க்கிறவராகிய கர்த்தர் (சங் 23:1)*

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" (வச 1)

2

**யேகோவா-யீரே / Jehovah-Jireh**

*பார்த்துப் பராமரிக்கிறவராகிய கர்த்தர் (ஆதி 22:14)*

"நான் தாழ்ச்சியடையேன்" (வச 1)

"அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து..." (வச 2)

"என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (வச 5)

"ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்" (வச 6)

3

**யேகோவா-ஷாலோம் / Jehovah-Shalom**

*சமாதான காரணராகிய கர்த்தர் (நியா 6:23,24)*

"அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்" (வச 2)

4

**யேகோவா-ரப்பா / Jehovah-Rapha**

*சுகமாக்குகிறவராகிய கர்த்தர் (யாத் 15:26)*

"அவர் என் ஆத்துமாவைத் தேற்றி" (வச 3)

"என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்" (வச 5)

5

**யேகோவா-சிட்கெனு / Jehovah-Tsidkenu**

*நீதியாயிருக்கிற (நீதிமானாக்குகிற) கர்த்தர் (எரே 23:5,6)*

"தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" (வச 3)

6

**யேகோவா-மேக்கடேஷெம் / Jehova-Mekaddeshem**

*பரிசுத்தமாக்குகிறவராகிய கர்த்தர் (லேவி 20:8)*

"என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" (வச 3)

7

**யேகோவா-மாக்கே / Jehovah-Makkeh**

*அடிக்கிறவராகிய கர்த்தர் (எசேக் 7:9);* "மரண இருளின் பள்ளத்தாக்கு" (வச 4)

8

**யேகோவா-நிசி / Jehovah-Nissi**

*வெற்றிக்கொடியான கர்த்தர் (யாத் 17:14-16)*

"என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி" (வச 5)

9

**யேகோவா-ஷம்மா / Jehovah-Shammah**

*பிரசன்னம் அருளுகிறவராகிய கர்த்தர் (எசே 48:10,35)*

"தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (வச 4)

"நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (வச 6)